**OPEN ACCESS**

Manuscript ID: TAM-070120225098

Volume: 7

Issue: 1

Month: July

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.04.2022

Accepted: 24.05.2022

Published: 01.07.2022

Citation:
Moovendan, PS. "Cultural Traditions in Kalki's Short Story 'Veena Bhavani.'" *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 1, 2022, pp. 76–84.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i15098.

*Corresponding Author:
psmnthn757@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Cultural traditions in Kalki's Short Story 'Veena Bhavani'

**Dr. P.S. Moovendan**
*Associate Professor, Department of Tamil Studies*
*Arulmiku Subramaniaswamy Government Arts College*
*Thiruthani, Thiruvallur District, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0003-1353-4821*

**Abstract**

Kalki is one of the best who achieved great achievements in Tamil literary creation and earned an immortal place in the field of Tamil literature. Just as his novels have a permanent place in history, so do his short stories. They are meant to reinforce the integrity of civilization and human virtue. Although he has created many short stories, the morals and cultural integrity of the human cultural traditions that he expresses through the short story 'Veena Bhavani', formed in his work, form the central subject of this article.

**Key Words:** Kalki, Veena Bhavani, Cultural Traditions, Short Stories, Human Culture Morality

**References**

1. Kalki. 2006. *Sirukathai Kalangiyam*, Volume-2, Chennai, Saradha Pathipagam.
2. Varadharasan, M. 2000. Tirukkural Kaiyadakka Urai, Chennai, Kazhaga Veliyeedu
3. Paramasivanandam, A.M. 1980. Samuthayamum Panpadum, Chennai, Pari Nilayam.
4. Balasubramanian, K.V. 1994. *Sanga Ilakiyathil Samooga Amaippugal*, Chennai, New Century Book House P. Ltd..

# கல்கியின் "வீணை பவானி" சிறுகதையில் பண்பாட்டு மரபுகள்

*முனைவர் ப.சு. மூவேந்தன்*
இணைப்பேராசிரியர், தமிழியல்துறை
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி அரசு கலைக்கல்லூரி
திருத்தணி, திருவள்ளுவர் மாவட்டம்

***ஆய்வுச்சுருக்கம்***

*உலகின் ஏனைய இலக்கியங்களைக் காட்டிலும் தமிழ் இலக்கியங்களின் மையப்பொருளாக அமைந்திருப்பது அறம் ஆகும். அவ்வகையில் தமிழர் வகுத்துள்ள அறங்கள் மானுடத்தை வளப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளன. அவை தனிமனிதனையும் சமூகத்தையும் வளப்படுத்தும் ஒழுக்கவியல் பண்புகளாகவும் அமைந்தவை. சங்கச் செவ்வியல் இலக்கியங்களின் அடிக்கருத்தாக அமைந்த இவ்அறப்பண்புகளைச் சற்றும் பிசகாமல் தன் படைப்புகளின் வழியாக வெளிப்படுத்தியவர் அமரர் கல்கி ஆவார். மானுட ஒழுக்கவியல் பண்பாட்டு மரபுகள் அவரது சிறுகதைகளின் கதையும், கதையமைப்பும், கதை நிகழ்வுகளும் சிறுகதைப் படைப்பாக்கத்தில் துணையாக நின்றுள்ளதனையும், அதன்வழி அறிவுரைகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதனையும் நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.*

***குறிச்சொற்கள்:*** *பண்பாடு, பண்பாட்டு ஒழுக்கவியல், தனிமனிதஅறம், வாழ்வியல் அறம். விழுமியங்கள்.*

## முன்னுரை

தமிழ்ப் புத்திலக்கியப் படைப்பாக்கத்தில் மாபெரும் சாதனைகளை நிகழ்த்தி, தமிழ் இலக்கியப் பரப்பில் அழியாத இடத்தைப் பெற்றுச் சிறந்தவர்களில் கல்கி குறிப்பிடத்தக்கவர். அவரது நாவல்கள் வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றதைப் போன்றே, அவர் படைத்த சிறுகதைகளும் தனித்திறம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன. அவை பண்டைத்தமிழ்ப்பாட்டின் சீர்மையையும் மானுட அறத்தையும் வலுப்படுத்துவதாக அமைந்துள்ளன. பல சிறுகதைகளை அவர் படைத்தளித்திருப்பினும் அவரது படைப்பில் உருவான "வீணை பவானி" சிறுகதையின் வழியாக அவர் வெளி ப்படுத்தும் மானுடப் பண்பாட்டு மரபுகளின் ஒழுக்கவியல் மற்றும் பண்பாட்டுச் சீர்மை ஆகியன இக்கட்டுரையின் மையப் பொருளாக அமைகிறது.

## கல்கி

புகழ் பெற்ற தமிழ் எழுத்தாளர்களில் ரா. கிருஷ்ணமூர்த்தி என்னும் இயற்பெயர் கொண்ட கல்கி (செப்டம்பர் 9, 1899 - டிசம்பர் 5, 1954) குறிப்பிடத்தக்க ஒருவராவார். இதுவரை 35 சிறுகதைத் தொகுதிகள், புதினங்கள், கட்டுரைகள், பயணக்கட்டுரைகள் மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். பல சிறுகதைகளைப் படைத்தளித்ததோடு மட்டுமல்லாது சிறுகதையாசிரியர்கள் பலரையும் உருவாக்கிய சிறப்புக்கு உரியவராகத் திகழ்கிறார்.

## வீணை பவானி

அமரர் கல்கியால் எழுதப்பட்ட சிறந்த சிறுகதைகளில் இதுவும் ஒன்று. தனிமனித வாழ்வில் பின்பற்றப்படும் ஒழுக்கமே நிலைத்த புகழினையும் நற்பெயரையும் ஏற்படுத்தித் தரும் என்பதனை மையமாகக் கொண்டு இக்கதை படைக்கப்பட்டுள்ளது.

**கதையமைப்பு**

கதையாசிரியர் இக்கதையில் ஒரு பாத்திரமாகவும், கதை சொல்லும் பாத்திரமாகக் கந்தப்பப் பிள்ளையும் திகழ்கின்றனர். இவ்விருவரது உரையாடலின் வழியாக இக்கதையின் மையப்பொருள் எடுத்துரைக்கப்படுகிறது.

திருவாரூரை அடுத்துள்ள பூந்தோட்டம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவள் பவானி. அவளது வீணை வாத்திய இசை மக்களை மயக்கத்தில் ஆழ்த்துவதாக அமைந்துள்ளது. அவள் வீணை இசைத்து மக்களை மயங்க வைப்பத்தில் மட்டுமல்ல அழகாலும் மக்களை மயங்கச் செய்பவளாக இருக்கிறாள். அவளது தாய் பிரஹதாம்பாள் தாசியர் குலத்தைச் சேர்ந்தவள் என்றாலும், ஒருவனுக்கே உரிமை பூண்டு வாழ்ந்து வருகிறாள். மிகப்பெரும் செல்வத்தில் வாழ்ந்தாலும் அவள் ஒழுக்கக் குறைவு இல்லாமல் தன் மகளை வளர்த்து, தன்னைப் போன்றே அவளையும் இத்தொழிலை விடுத்து, திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டும் என்று அவளை வற்புறுத்துகிறாள். ஆனால் பவானியோ, திருமணத்தை வெறுத்து, தான் ஆண்டாள் போன்று கன்னியாகவே வாழ்ந்து ஆண்டவனுக்கு இசையால் பணிசெய்து அவன் தாள் அடையப் போவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

> **"அவள் வீணை வாசிக்கும்போது கையிலுள்ள வாத்தியத்தின் கம்பிகளைத் தான் மீட்டுகிறாளா? அல்லது கேட்பவர்களின் இருதய வீணையின் கம்பியைத்தான் மீட்டுகிறாளா? என்ற சந்தேகம் தோன்றும்".**
>
> *(ப. 29)*
>
> **"வீணையை எடுத்துக்கொண்டு பாடினாளானால், ஸரஸ்வதி அவதாரம் எடுத்து வந்திருப்பது போல்தான் தோன்றும்"**
>
> *(ப. 24)*

இந்நிலையில் திருவாரூரில் இசைக்கச்சேரி செய்துவிட்டு வெளியே வருகையில், கோபாலசாமியை எதிர்ப்பாராது சந்திக்கிறாள். அவரது பேச்சு அவளை வசீகரிக்கிறது. கோபாலசாமி ஏற்கெனவே திருமணமாகி, குழந்தைகளுடன் வசித்து வருபவர். உள்ளூர் மிராசுதாரர். பவானியின் அழகிலும் இசையிலும் அவர் அவளிடம் அடங்கிப்போக, பவானியோ கோபாலசாமியின் பேச்சால் கவரப்பட்டு அவருடன் இணைந்துவிடுகிறாள்.

> **"இந்த மனுஷருக்கும் பவானிக்குந்தான் விதிவசத்தினால் தொடர்பு ஏற்பட்டது"**
>
> *(ப. 27)*
>
> **"விதி இருக்கும்போது எப்படியாவது வழியும் ஏற்பட்டு விடுகிறது"**
>
> *(ப. 27)*
>
> **"பவானியின் தெய்வீக சங்கீதத்திற்குக் கேடு வராமலிருக்க வேண்டுமே என்ற கவலையும் உண்டாயிற்று"**
>
> *(ப. 28)*

என்னும் பகுதிகள் பவானி-கோபாலாசாமியின் உறவின் நிலைப்பாட்டினைக் காட்டுகின்றன.

பவானி தங்களுக்குக் கிடைக்காமல் கோபாலசாமிக்குக் கிடைத்து விட்டதனை எண்ணி, உள்ளூர்ப் பணக்காரர்கள், பிரபுக்கள், மிராசுகள் அவளை எவ்வாறேனும் அடைவதற்கு முயற்சி செய்வதோடு, கோபாலசாமியைப் பழிவாங்கவும் துடித்துக் கொண்டிருக்கின்றனர். அதன் வெளிப்பாடாக அவருக்குப் பலவகை களிலும் தொல்லைகள் கொடுக்கின்றனர். கோபாலசாமியின் மீது பல்வேறு வழக்குகளைத் தொடுக்கின்றனர். இதனால் அவரது சொத்துக்கள் வழக்கின் பொருட்டே செலவழியத் தொடங்குகிறது. கோபாலசாமியும் அவர் மீதான வழக்குகளால் மிகுந்த மனஉளைச்சலுக்கு உள்ளாகிறார். பவானியுடன் கொண்ட தொடர்பால்தான் தனக்கு இவ்வாறெல்லாம் ஏற்பட்டு விட்டதாகக் குறைபட்டுச் சொல்கிறார்.

பவானியோ, தான் விரும்பி ஏற்றுக் கொண்ட கோபாலசாமியை தன் உயிருக்கு நிகராகப் போற்றுகிறாள். அவரில்லாத உலகத்தில் தன்னால் வாழ இயலாது என்றும் கூறுகிறாள்.. இந்நிலையில் வழக்கு ஒன்றிற்காகச் சென்னை வந்து திரும்பும் கோபாலசாமி, விபத்தில் சிக்கி, இறந்து விட்டதாகச் செய்தி வெளியாகிறது. இதனால் கோபாலசாமியின் குடும்பமும் பவானியும் பெருந்துயரத்திற்கு ஆளாகின்றனர். இதனைக் கேள்விப்படும் கந்தப்ப பிள்ளை, கோபால சாமியின் வீட்டுக்கும், பவானியின் வீட்டுக்கும் துக்கம் விசாரிக்கச் செல்கிறார். கோபாலசாமியின் இறப்பால் அவரது குடும்பம் மிகப்பெரும் துயரத்திலும், பொருளாதாரச் சிக்கலிலும் தவிப்புக்கு உள்ளாகியிருப்பதனைக் காண்கிறார். பவானியின் வீட்டுக்குச் சென்று பார்க்கையில் அவள் எந்தவொரு துயரத்தையும் வெளிக்காட்டிக் கொள்ளாது இயல்பாகப் பேசுவதனைக் கண்டு, அவள் பிறந்த குலத்தின் இயல்பினையே பழித்துப் பேசுகிறார்.

அப்போது, பவானி, தான் வருகின்ற நவராத்திரி வெள்ளிக்கிழமையன்று திருவாரூர் கோயிலில் கச்சேரி செய்யப் போவதாகவும், அன்றைய நாளில் தாங்கள் கட்டாயம் வந்து கலந்துகொள்ள வேண்டும் என்றும், அது தனது கடைசி கச்சேரியாக இருக்கும் என்றும் கூறுகிறாள். பவானியின் நடவடிக்கையால் மனம் வருந்தும் கந்தப்பபிள்ளை, அவளிடம் வேண்டாவெறுப்பாகத் தான் வருவதாகச் சொல்ல, அவளோ அன்றைய நாளில் கண்டிப்பாக நீங்கள் வந்து கலந்து கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறாள். அதனை ஏற்று அன்றைக்கு பவானியின் வீட்டுக்குச் செல்லும் கந்தப்ப பிள்ளை அவளது ஆடை அலங்காரங்களைக் கண்டு வியக்கிறார். தன் உயிருக்குயிரான கணவன் இறந்த பின்பும் இவ்வளவு அலங்காரங்களுடன் அவள் எந்தவிதமான கவலையையும் வெளிக்காட்டாது இருப்பதனைக் கண்டு அவளைத் தூற்றவும் செய்கிறார். அன்றைய நாள் கச்சேரி மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. கச்சேரியில் ஏராளமான மக்கள் வந்து கலந்துகொண்டிருக்க, அங்கே ஒருவர் மட்டும் தலைப்பாகை அணிந்து கொண்டு முகத்தை மூடியவாறு நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருப்பதனைக் காண்கிறார். அவர் வேறு யாருமல்ல இறந்துபோனதாகச் சொல்லப்பட்ட கோபாலசாமிதான் என்பதனைக் கண்டு வியப்படைகிறார். அவரோ, தன்னை உயிராகக் கருதியதாகச் சொன்ன பவானி, தன்னை ஏமாற்றிவிட்டு எந்த அளவுக்கு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்பதனைக் காண்பதற்காக மாறுவேடத்தில் வந்ததாகச் சொல்கிறார். நிகழ்ச்சி முடிந்த பின் பவானியின் வீட்டுக்கு இருவரும் செல்கின்றனர். வீட்டுக்கு வந்த பவானி, பாலை எடுத்துப் பருகுகிறாள். வீட்டுக்கு வந்திருப்பது யார் என்று பார்க்கிறாள். வந்திருப்பது தன் ஆசைக்கணவன் கோபாலசாமி தான் என்பதனை அறிந்து திகைத்து நிற்கிறாள். அப்போது பவானி கீழே மயங்கிவிழ, கந்தப்பபிள்ளை மருத்துவரை அழைத்து வர ஓடுகிறார். மருத்துவர் வந்து பார்த்து அவள் இறந்துவிட்டதாகச் சொல்கிறார். கோபாலசாமியைத் திடீரெனப் பார்த்ததால் தான் இவ்வாறு நிகழ்ந்தது என்று மருத்துவரிடம் சான்றிதழ் பெற்றுக் கொள்கிறார் கந்தப்ப பிள்ளை.

பவானி தன் சொத்துக்கள் யாவற்றையும் தனது குழந்தைகளின் பெயரில் எழுதி வைத்திருந்ததை அறிந்து மிகுந்த மனம் வருந்துகிறார். தன் மீதும் தன் குடும்பத்தினர் மீதும் அவள் கொண்டிருந்த அன்பினைக் கண்டு வியக்கிறார். அவள் மீதான வெறுப்பு மெல்ல மறைந்து, அவள்மீது ஆழமான அன்பு பிறக்கிறது. கோபாலசாமி பவானியின் மரணம் இயற்கையானது தான் என்று நம்பிக்கொண்டிருக்க, கந்தப்ப பிள்ளையோ, அவள் பாலில் விஷத்தைக் கலந்து குடித்து, அவள் தற்கொலை செய்து

கொண்டதனையும், அவளது தற்கொலை செய்து கொள்வதற்கு முன்னதாக எழுதிவைத்த கடிதம் தன்னிடம் இருப்பதாகவும் சொல்லி, அக்கடிதத்தைக் கதையாசிரியரிடம் காட்டுகிறார். பவானி தற்கொலை செய்து கொண்டாள் என்று சொல்லியிருந்தால் அவளது அன்பின் ஆழத்தைக் கருதி, கோபாலசாமியும் உடன் தன்னை மாய்த்துக் கொண்டிருந்திருப்பார் என்பதால், இதுவரை இச்செய்தியை கோபாலசாமியிடம் சொல்லவில்லை என்பதற்கான காரணத்தையும் சொல்லுவதாக இக்கதை அமைந்துள்ளது.

## சிறுகதை உணர்த்தும் பண்பாட்டு மரபுகள்

பண்படுவது பண்பாடு ஆகும். பண்படுதல் சீர்படுதல் அல்லது திருந்துதல் என்ற பொருளைத் தரும். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும் திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளம் என்றும் சொல்வது வழக்கம்.

மனித இனம் எவ்வளவு கூரிய அறிவுடன் படைக்கப் பெற்றிருப்பினும், பட்டங்களையும், பல்வேறு சிறப்புக்களையும் பெற்று உயர்ந்திருப்பினும், செல்வத்தால் செழித்திருப்பினும் பிறவகை உயர்வுகளால் பெருமைபெற்று விளங்கினும் பண்பாடு என்ற ஒன்று அவ்வினத்திற்கு இல்லையெனில் அது ஓரறிவுடைய மரத்திற்கும் கீழ்மைப்பட்டதாகக் கருதப்பெறும். பண்புகள் ஒருவருக்குப் பல்வேறு செல்வங்களின் நிலைக்களன்களின் அடிப்படையாக அமைகின்றது. பண்பாடு என்னும் செல்வம் மனிதனை உயர்த்திக் கொண்டே சென்று நின்றுநிலைக்கச்செய்கிறது. பண்பாடு மனித இனத்துடன் இயைந்து காணப்படுவது. அது மனித சமூகத்திலிருந்து பிரிக்க இயலாதது. பிற உயிரினங்களிடமிருந்து மனித சமூகத்தைப் பிரித்துக் காட்டுவது அது பின்பற்றி நடக்கும் பண்பாட்டுச் சிறப்பினால் தான் ஆகும்.

இனி, இக்கதையின் வழியாக உணர்த்தப்படும் பண்பாட்டு மரபுகளை,

**ஒழுக்கமே உயர்வாதல்**
**கற்பின் திண்மை போற்றல்**
**பொருளின் உண்மைத் தன்மை ஆராய்ந்து அறிதல்**
**பொய்மையும் வாய்மையிடத்தது ஆதல்**
**மானமே பெரிதெனக் கருதுதல்**
**ஈகைத்திறம் போற்றல்**

என்னும் நிலைகளில் வகைப்படுத்திக் காணலாம்.

### ஒழுக்கமே உயர்வாதல்

மனித வாழ்வில் எஞ்ஞான்றும் உயர்வைத் தருவது அவன் பின்பற்றி நடக்கும் ஒழுக்கமே. ஒழுக்கமே ஒருவனுக்கு உயர்வினைத் தரும். ஒழுக்கத்தால் வரும் உயர்வே நிலைத்த புகழினைத் தரும் என்பது இக்கதையில் இடம்பெறும் பவானியின் செயல்பாடுகளின் வழியாக உணர்த்தப்படுகிறது.

பவானி, கணிகையர் குலத்தைச் சார்ந்தவள். அவள் சார்ந்த குலத்தின் தொடர்பான சமூகத்தின் பார்வை, "தன்னிடம் நிறைந்துள்ள அழகையும், கலைத்திறனையும் காட்டி, செல்வந்தர்களின் பொருளையும் இன்பத்தையும் நல்கி, ஒருவர் மாட்டும் தங்காதார்" என்பதாக இருக்க, இதில் இடம்பெறும் பவானியோ, தன் மனத்திற்குள் கணவனாக வரிந்து கொண்ட கோபாலாசாமிக்கு மட்டுமே உரியவளாக விளங்குகிறாள். அதோடு மட்டுமல்லாமல் அவருடைய குடும்பத்தின் மீதும் அக்கறை உள்ளவளாக விளங்குகிறாள். இதன்வழி மக்கள் எத்தகு நிலையில் இருந்தாலும் அவர்கள் பின்பற்றி நடக்கும் ஒழுக்கப்பண்பே அவர்களுக்கு உயர்வினையும், நிலைத்த புகழினையும் தருவதாக அமைந்திருக்கும் என்பது காட்டப்படுகிறது.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"**

***(குறள். 131)***

என்ற குறளின் பண்பாட்டுச் சீர்மை அவளது பாத்திரப்படைப்பின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது. கோபாலசாமியின் இறப்பிற்குப் பின்னரும் அவள் தன் மனத்தை மாற்றிக் கொள்ளாது கற்பின்வழி நிற்றல் அவளது உயர்ஒழுக்கப் பண்பிற்குச் சான்றாக அமைந்திருக்கிறது.

### சமூகவியலில் ஒழுக்கம்-கற்பு

மனிதன் பின்பற்றி நடக்கும் ஒழுக்க விதிகள், இரக்கம், ஒப்புரவு, ஈகை, முதலான மனிதப் பண்புகள் குடும்பம், சமூகம், அரசு ஆகிய சமூக அமைப்புகள் குலையாதிருப்பதற்குத்துணைநின்றுள்ளன. இவ்வாறான ஒழுக்க விதிகள்,

**ஒருவன் பின்பற்றி நடக்கும் ஒழுக்கமே அவனது குடிமைக்கு அடையாளமாகும்.**
**ஒழுக்கமே அறத்திற்கு வித்தாகும்.**
**ஒழுக்கமுடையார் தீயவற்றைச் செய்யவும், சொல்லவும் மாட்டார்.**
**ஒழுக்கத்தைப் பின்பற்றி நடப்பவரே உயர்ந்தவர்**

என்பனவாகச் சங்க காலத்தில் கட்டமைக்கப்பட்டிருந்தன. மனம், சொல், செயல் ஆகியன ஒழுக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தன. தனிமனிதத் தூய்மையும், குடும்பத் தூய்மையும் ஒழுக்க விதிகளுக்குள் அடக்கப்பட்டது.

### ஒழுக்கமே கற்பாதல்

இல்லற ஒழுக்கம் "கற்பு" என்னும் சொல்லால் குறிக்கப்பட்டது. "திண்ணிய ஒருமுக ஆற்றலை இது குறித்து வரினும், இதற்குக் கற்பித்தல், கற்பித்தவாறு நடத்தல் எனப் பொருள் கொள்ளலாம். மரபு வழியாக, தம் பெற்றோர் மூலமாகக் கற்றுக் கொள்ளுதலையே இது குறிக்கும். அது தந்தை, தாயர் கற்பியாமல், பார்த்தும், உணர்ந்தும், குருதி வழிப் பண்பாட்டின் அடிப்படையிலும் பெறும் கல்வி" (ப. 167) என்றும் கூறுவார் கு.வெ. பாலசுப்பிரமணியன். சங்கப் பாடல்களில் "அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள்?" என வியத்தல் இதனடிப்படையிலேயோகும்.

**"பவானியின் மனம் களங்கமற்றது"**
**(வீணை பவானி, ப. 40)**

என்பதன் வழி இச்செய்தி உணர்த்தப்படுகிறது.

"பவானியின் தாயாருக்குப் பூந்தோட்டம் பிரஹதாம்பாள் என்று பெயர். அவள் பரம்பரையான பணக்காரி. அதோடு அவளுடைய குணத்திலும் பிரசித்தி பெற்றவள். ஒரு பெரிய மனிதரோடு மட்டும் சிநேகம் வைத்துக் கொண்டிருந்து, அவருக்கு உண்மையான தர்மபத்தினியாக நடந்து கொண்டிருந்தாள். அவள் காலஞ்சென்ற பிறகு, அவள் பகவானுடைய பக்தியில் சிந்தனையைச் செலுத்தி வந்தாள்." (ப. 25) என்பதன் வழியாகக் கற்பித்தல் திறம் மரபின் வழி வந்த கேண்மையாக விளங்குவது உணர்த்தப்படுகிறது.

தாய் திகைப்பவும், புகழவும் அமைந்த குடும்ப ஒழுகலாறே கற்பு எனப்பட்டது. இதனால் "கற்பு" என்பது "முன்னோர் சொல்நெறி பிழையாது நிற்றல்" என்பதை உணர்த்துவதனைக் காணலாம். இத்தகு கற்பின் மேன்மை பவானி பாத்திரத்தின் வழியாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

### மெய்ப்பொருள் காண்பது அறிவு

மானுட வாழ்வில் எதனையும் உற்று நோக்கி, ஆராய்ந்து அதன் பின்னரே முடிவுகள் எடுப்பதுச் செயலாற்றுவதே சிறந்தது. அறியாமலும், ஆராயாமலும் விசாரிக்காமல் எடுக்கும் முடிவுகள் துன்பத்தையே தரும். ஆதலால், ஐம்புல அறிவையும் உற்றுநோக்கிய பின்னர் செயலாற்றுவதே சிறந்தது என்று அறிவுறுத்தப்படுகிறது.

**"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு"**
**(குறள். 423)**

என்பதே மானுட வாழ்வின் வளர்ச்சிக்குத் துணைசெய்வதாக அமைந்திருக்கும். ஆராயாது விரைந்து கொடுத்த தீர்ப்பினால் பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்விட்டுத் தன் மேன்மையைக் காத்துக் கொண்டதனைச் சிலப்பதிகாரத்தின் வழியாக உணரலாம். அதே போன்று இச்சிறு கதையில் இடம்பெறும் கோபாலசாமி ஆராயாது, தன் ஆசைநாயகி அவளது குலத்திற்குரிய குணம் கொண்டவளாக விளங்குவதாகக் கருதி, அவளைப் பழித்துப் பேசுவதும், தன் கணவன் இறந்துவிட்டான் என்ற பத்திரிக்கைச் செய்தியை உண்மையாக நம்பி, அதனால் தன் உயிரை பவானி மாய்த்துக் கொள்வதனையும், ஆராயாது எடுக்கும் முடிவுகளாக ஆசிரியர் காட்டுகிறார். இதனால் அறிவுத்திறத்துடன் ஆராய்ந்த பின்னரே முடிவுகள் எடுத்தல் வேண்டும் என்பது இதன்வழி அறிவுறுத்தப்படுகிறது.

"என்னுடன் உடன்கட்டை ஏறுவேன் என்று சொன்னவர்கள் எல்லாம் இப்போது எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று" (ப. 39)

என்னும் பகுதி ஆராயாமல் எடுக்கும் முடிவினைக் காட்டுகிறது.

### பொய்மையும் வாய்மையிடத்தது

திருவள்ளுவர் "ஈன்றாள் பசி காண்பாளாயினும் சான்றோர் பழிப்புக்குள்ளாகும்" செயலைச் செய்யற்க" என்று அறமுரைக்கிறார். ஆனால், அதே திருவள்ளுவர் தான், "பொய்மையும் வாய்மையிடத்த" என்று அறிவுறுத்தவும் செய்கிறார். நன்மையால் விளையும் கேடுகள் சிலவாக நிற்கும், பொய்மை ஓரோரிடத்தில் நன்மை செய்யுமாயின் பொய்யைச் சொல்லிச் சூழலைச் சமாளிப்பதில் எவ்விதத் தவறுமில்லை என்று அறிவுறுத்துகிறார். இத்தகு பொய்மையும் வாய்மையிடத்ததாகும் திறன் இச்சிறு கதையின் வழியாக உணர்த்தப்பட்டுள்ளது. தன் கணவன் இறந்த பின்னர் இனித் தனித்திருந்து வாழ்வது பயனற்றது என்று கருதி, பவானி தற்கொலை செய்துகொள்கிறாள். பவானி தன்மீது வைத்திருந்த அன்பின் ஆழத்தை அறிந்து கொள்ளும் கோபாலசாமி அவள் இழப்பால் பெரிதும் துன்பப்படுகிறார். இத்துன்பத்தால் அவர் தனக்கு ஏதாவது தீங்கினைச் செய்துகொள்வாரோ? என்று கருதும் கந்தப்ப பிள்ளை, அவள் இயற்கையாக மரணித்தாள் என்று மருத்துவரால் சொல்ல வைக்கிறார். இதனால் கந்தப்ப பிள்ளையும் அவரது குழந்தைகளும் உயிர்பிழைக்கும் நிலை ஏற்படுகிறது..

"இது தெரிந்தால் அவரும் உயிரை விட்டாலும் விட்டிருப்பார். அல்லது அவருடைய மனைவி மக்கள் மேல் பாசம் இல்லாமலும் போயிருக்கலாம். ஒரு குடும்பத்தை அநியாயமாகக் கெடுப்பானேன் என்று நான் சொல்லவில்லை" (ப. 42)

குடும்பத்தைக் காப்பதற்காகவும், குழந்தைகளை வளர்ப்பதற்காகவும் சொல்லப்படும் பொய் நன்மை பயக்குமெனின் அவ்வாறு சொல்வதால் தவறில்லை என்பது இதன் வழியாக அறிவுறுத்தப்படுகிறது.

### மானமே பெரிதாதல்

பண்டைத் தமிழர் வாழ்வில் மிக உயர்வாகப் பேசப்பட்ட பொருள் மானம் ஆகும். அது தன்னிலையில் தாழாமையும், தாழ்வு வரின் வாழாமையும் ஆகும். மானத்தைச் சிறப்பிக்கும் பொருட்டே திருவள்ளுவர் "மானம்" என்ற அதிகாரத்தைப் படைத்தார். மானமே உயர்ந்தது என்பதனைச் சிறப்பிக்கும் விதத்தில் தமிழில் காவியங்களும், கதைகளும் படைக்கப்பட்டு வருகின்றன. இச்சிறுகதையில் மானத்தின் சிறப்பு உணர்த்தப்பட்டுள்ளது.

பவானி, தான் பிறந்த குலத்தின் வழியாக மானத்தை நிலைநிறுத்துகிறார். சமூகத்தில் மானத்தைப் பின்பற்றி ஒழுகி நடப்பவர்களே

உயர்வானவர்கள் என்பதும், மானப்பண்பு சமூகத்தின் உயர்நிலையில் உள்ளவர்களுக்கு மட்டுமே உரித்தான ஒன்றாக இருக்கிறது என்பதும் நடைமுறையில் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் சமுதாயத்தில் ஒதுக்கி வைத்துப் பார்க்கப்பட்ட பரத்தையர் இனத்தைச் சார்ந்த பவானி, தன் வாழ்வில் ஒருவனையே கணவனாகக் கருதி, வாழ்வதோடு மட்டுமல்லாது, தன் கணவன் இறந்த பின்னர் வாழ்வது பயனற்றது என்று கருதி, தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள். ஏனென்றால் பவானியை அடைவதற்காக உள்ளூர் பெரும்பணக்காரர்கள் முயன்று கொண்டிருக்க, அவர்கள் யாரையும் பொருட்படுத்தாது, மயிர் நீப்பின் வாழாக் கவரி மான் போல், தன் துணை இழந்து வாழ்தல் தன் மானத்திற்கு இழுக்கெனக் கருதி, உயிரையே மாய்த்துக் கொள்வது, மானத்தை உயர்வாகக் கருதும் போக்கினைக் காட்டுகிறது.

## ஈகைத்திறம்

சமூக வாழ்வின் வளமைக்கும் வீழ்ச்சிக்கும் ஈகையே தலையாய அறமாகத் திகழ்கிறது. சங்க காலத்தில் முதன்மையாகச் சொல்லப்பட்ட அறம் ஈகைப்பண்பே ஆகும். இச்சிறுகதையில் ஈகைத்திறன் சிறப்பித்துப் பேசப்படுகிறது. தனக்கு எந்தவிதத்திலும் தொடர்பில்லாதவர்களும், தன்மீது மிகுந்த வெறுப்பினைக் கொண்டிருப்பவர்களுமாக விளங்கும் கோபாலசாமியின் குழந்தைகளுக்குத் தன் சொத்துக்கள் அனைத்தையும் எழுதி வைக்கிறாள் பவானி. இச்செயலின் வழியாகக் கொடைப் பண்பில் அவள் உயர்ந்து நிற்பது புலப்படுத்தப்படுகிறது.

பிறரிடம் நிறைந்துள்ள பொன்னையும், பொருளையும் அபகரித்துக் கொண்டு அவர்களை அலைக்கழித்தலையே வாழ்க்கையாகக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் தாசியர் குலத்தில், அக்குலத்தைச் சார்ந்த பெண், தான் சேர்த்து வைத்த சொத்துக்கள் யாவற்றையும் பிறர்க்கு, எந்தவொரு பிரதிவுபகாரமும் எதிர்பாராமல் கொடுத்துதவும் நிகழ்வின் வழியாகப் பவானியை உயர்த்திக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

இத்தகு நிகழ்வுகளின் வழியாக ஆசிரியர் கட்டமைக்கும் ஒழுக்கவியல் பண்புகளைப் பின்வருமாறு பகுக்கலாம்.

1. தனிமனித ஒழுக்கமே சிறந்தது
2. ஒருவனுக்கு ஒருத்தியென வாழ்வதே கற்பு வாழ்வின் வெளி ப்பாடாகும்.
3. உயிர்களிடத்து அன்பு செலுத்துதலே உயர்வானது
4. இரக்கஉணர்வு கொள்வது மானுட வளர்ச்சிக்குத் துணைசெய்யும்
5. இறைமைநெறியில் மனத்தைச் செலுத்து வதே சிறந்தது
6. இசைக்கலை வளர்த்தல் மக்கள் மனங்களை மயங்க வைப்பது
7. ஒப்புரவே சமூக மேன்மை தரும்

## தனிமனித ஒழுக்கம்

சமூகமும் நாடும் வளம்பெறுவதற்குத் தனிமனித ஒழுக்கம் போற்றப்பட வேண்டும் அதனை எத்தகு நிலையிலும் பின்பற்றி நடத்தலே சிறந்தது. தனிமனித ஒழுக்கம் இச்சிறுகதையில் பவானி பாத்திரத்தின் வழியாகக் காட்டப்பட்டுள்ளது. மாதவியின் மகள் மணிமேகலை போன்ற அழகினையும், கலையில் மிக உயரிய ஆளுமையைப் பெற்றிருந்தாலும் அவள் தான் விரும்பி ஏற்றுக் கொண்ட ஒருவனுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, ஒழுக்கத்தில் உயர்ந்து நிற்கிறாள். ஆதலால் வாழ்க்கையில் ஒழுக்கப்பண்பே எந்த நிலையிலும் சிறந்தது என்பது வலியுறுத்தப்படுகிறது.

## ஒருவனுக்கு ஒருத்தியென வாழ்தல்

சங்க காலத்தில் பலதார மணம் பெருவழக்காக இருந்தது. இதனால் ஊடலும், ஊடல் வழிப்பட்ட பிரச்சினைகளும் இல்லற

வாழ்வில் நிலவியதைக் காணமுடிகிறது. ஒருவனுக்கு ஒருத்தியென வாழும் வாழ்க்கையினை தொல்காப்பியரும், திருவள்ளுவரும் கம்பரும் உயர்த்திப் பேசுகின்றனர். அது இல்லற வாழ்க்கையை மேன்மைப்படுத்துகிறது. அத்தகு தொன்மைச் சிறப்பு இக்கதையின் வழியாக பவானி-கோபாலசாமி வாழ்வியல் மூலம் காட்டப்படுகிறது.

"கோபாலசாமி முதலியாரும் நானுமாகச் செய்ய வேண்டிய சடங்குகளையெல்லாம் செய்து முடித்தோம். பாவம்! அந்த மனுஷர் பட்ட துக்கத்துக்கு அளவே இல்லை"

(ப. 40)

## உயிர்களிடத்து அன்பு செலுத்துதல்

அன்பில்லாத இடத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல் நிலவுவதில்லை. உயிரின நேசிப்பே மானுடத்தை வளர்ப்பதற்குத் துணைசெய்யும். தன்னை ஏற்றுக் கொண்டதால் ஏற்பட்ட பிரச்சினைகளை அன்பின் வழியாகத் தீர்த்து வைக்கிறாள் பவானி. இதனால் அன்பே நிலையானது என்பது இச்சிறுகதையின் வழியாக எடுத்துரைக்கப்படுகிறது. துன்பம் செய்வார்ப் பொறுத்தல் தலை என்பது காட்டப்படுகிறது.

## இரக்க உணர்வு கொள்ளுதல்

அன்பு, அருள், இரக்கம் ஆகியன மானுடத்தை வளர்ப்பதற்குத் துணைசெய்யும் உளக்கருத்தியல்களாகும். இரக்க உணர்வு மிகுந்திருப்பதால் பவானி-கோபாலசாமி ஆகியோர் இடையே நிலவும் பிரச்சினைகளைக் களைவதற்குத் துணைசெய்கிறார் கந்தப்ப பிள்ளை. இரக்க உணர்வின் வழியாகவே மனிதநேயமும், மானுட நேயமும் வளம்பெறும் என்பது இதன்வழியாகக் காட்டப்படுகிறது.

## இறைமையில் மனம் செலுத்துதல்

உயிரினங்கள் பற்றுக்களால் ஆனவை. திருவள்ளுவர் பற்றுக பற்றற்றான் பற்றினை" என்றும், பிறவியாகிய கடலை நீந்துவதற்கு இறைவனின் தாள்களே சிறந்தவை என்றும், நிலமிசை நீடு வாழ்வதற்கு இறைவனின் மலரடிக்கமலமே சிறந்தது என்றும் குறிப்பிடுகிறார். மனத்தை ஒருநிலைப்படுத்துவதற்கும், உலக உயிரினங்களை ஒன்றிணைப்பதற்கும், மக்களை மகிழ்விப்பதற்கும் இசையே சிறந்த கலையாகும். இச்சிறுகதையில் பவானி, இசைக்கலையில் மிகப்பெரும் தேர்ச்சியுடையவளாகவும், இசையால் இறைவனை அடையத்தக்க பண்பினைப் பெற்றவளாகவும், இசையால் உயிரினங்களை ஆள்பவளாகவும் விளங்குவதனைக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

## முடிவுகள்

தமிழ் மரபின் பண்பாட்டுத் தொடர்ச்சியினைச் சங்க இலக்கியங்கள் முதலாக இன்றைய இலக்கியங்கள் வரை இனம் காணலாம். அறம் என்னும் வாழ்வியல் உறுதிப்பொருள் மானுட வாழ்வின் எல்லாக் காலகட்டங்களிலும் கடைப்பிடித்து ஒழுகத்தக்க பண்பாக விளங்கும் என்பதனை நோக்கமாகக் கொண்டே பண்டைத்தமிழர் அறத்திற்கே முதன்மை தந்து இலக்கியங்களைப் படைத்தளித்தனர். அவ்வகையில் சங்க இலக்கியங்கள் உணர்த்தும் பண்பாட்டுச் சீர்மையினையும், மரபுகளையும் எடுத்துரைக்கும் நோக்கில் கல்கியின் "வீணை பவானி" சிறுகதை அமைந்திருப்பது இதன்வழியாகத் தெளிவாகிறது.

## கருவிநூல்கள்

1. கல்கி. 2006. *சிறுகதைக் களஞ்சியம்*, தொகுதி-2, சென்னை, சாரதா பதிப்பகம்.
2. மு.வரதராசன். 2000. *திருக்குறள் கையடக்க உரை*, சென்னை, கழக வெளியீடு.
3. அ.மு. பரமசிவானந்தம். 1980. *சமுதாயமும் பண்பாடும்*, சென்னை, பாரி நிலையம்.
4. கு.வெ. பாலசுப்பிரமணியன். 1994. *சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்*, சென்னை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பி.லிட்.,